


திண்டிவனத்தில் நடைபெற்ற விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் ஒன்றிய, நகர, பேரூர்க் கழக மாணவரணி நிர்வாகிகள் நேர்காணல் நிகழ்ச்சியை சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர், மாநில மாணவரணி துணைச் செயலாளர்கள் அமுதரசன், ஈரோடு வீரமணி, புதுவை மாநில மாணவர் அணி அமைப்பாளர் மணிமாறன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரசன்னா ஆகியோர் உள்ளனர்.

### காலாண்டு விடுமுறையை

# நீட்டிக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை!

## விரைவில் அறிவிப்பு வெளியாகும் – திருச்சியில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி!

திருச்சி, செப். 27 -

திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து மத்திய பேருந்து நிலையம் வரையிலான வட்ட பேருந்து சேவையை பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று கொடி அசைத்து துவக்கி வைத்தார்.



இந்த பேருந்து சத்திரம் பேருந்து நிலையம், இ.பி. ரோடு, காந்தி மார்க்கெட், பாலக்கரை, மத்திய பேருந்து நிலையம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நீதிமன்றம், அரசு மருத்துவமனை, உறையூர், மீண்டும் சத்திரம் பேருந்து நிலையத்தை வந்து அடைந்து சுற்று வட்ட பேருந்தாக செல்ல இருக்கிறது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார் மண்டலக் குழுத் தலைவர் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திருச்சி மண்டலத்தின் பொது மேலாளர் அ. முத்துகிருஷ்ணன், துணை மேலாளர் வணிகம் ஆர்.சாமிநாதன், கோட்ட மேலாளர் புகழேந்திராஜ்,

பகுதி கழகச் செயலாளர் மோகன், மாமன்ற உறுப்பினர் மணிமேகலை, வட்டக் கழகச் செயலாளர் சங்கர், கழக நிர்வாகிகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி,

கும்பகோணத்தை தலைமையிடமாக கொண்டு அரசு போக்குவரத்து கழகம் செயல் பட்டு வருகிறது. சென்னை, மதுரை, கோவைக்கு அடுத்தபடியாக, திருச்சி பெரிய நகரமாக இருக்கிறது. எனவே, திருச்சியை தலைமையிடமாக கொண்டு தனி போக்குவரத்து கோட்டம் அமைக்க வேண்டும் என்கிற கோரிக்கை உள்ளது. இது குறித்து போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கரிடம் ஆலோசித்து முடிவெடுக்கப்படும்.

உதயநிதி ஸ்டாலினை துணை முதல்வர் ஆக்குவது குறித்து ஆதவ் அர்ஜீன் பேசிய கருத்து அவரின் தனிப்பட்ட கருத்து, முதிர்ச்சியற்ற கருத்து என கட்சியின் மாநில நிர்வாகிகளே தெரிவித்து விட்டனர். எனவே இது குறித்து விரிவாக பேச விரும்பவில்லை.

பள்ளி மாணவர்களுக்கான காலாண்டு விடுமுறையை நீட்டிக்க வேண்டும் என்கிற கோரிக்கை எழுந்துள்ளது இது குறித்து பள்ளிக் கல்வித் துறையின் முதன்மை செயலாளரிடம் பேசி உள்ளேன்.

இது தொடர்பாக இன்று அறிவிப்பு வெளியாகும்.

வி.சி.க. சார்பில் நடைபெறும் மதுவிலக்கு மாநாடு நல்ல நோக்கத்திற்காக நடத்தப்படக்கூடிய மாநாடு மக்கள் விழிப்புணர்வுக்காக நடத்தப்படுகிறது.

இதில் அரசியல் கலக்கக் கூடாது என வி.சி.க. தலைவரும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

### திண்டிவனத்தில்

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி அமைப்பாளர்களுக்கான நேர்காணல்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

திண்டிவனம், செப். 27 -

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில்ஒன்றிய நகர பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் நிகழ்ச்சி திண்டிவனத்தில் நடைபெற்றது. மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா அனைவரையும் வரவேற்றார்.

மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் ஞானசேகரன், லோகநாதன், சுபாஷ் சந்திரபோஸ், மதிவாணன், பெனாசிர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர் தலைமையில் நடைபெற்ற நேர்க்காணல் நிகழ்ச்சியை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

நேர்காணல் நிகழ்ச்சியில் மாநில மாணவரணி துணை செயலாளர்கள் அமுதரசன், ஈரோடு வீரமணி, புதுவை மாநில மாணவர் அணி அமைப்பாளர் மணிமாறன் ஆகியோர் கலந்துகொண்டு விழுப்புரம் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்க் கழக மாணவர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல் நிகழ்ச்சியினை நடத்தினர்.

தி.மு.க. மாணவர் அணிக்கு விண்ணப்பித்த 400க்கும் மேற்பட்டோர் நேர்காணலில் பங்கேற்றனர்.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், மாவட்டப் பொருளாளர் ரமணன், மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார், நகரச் செயலாளர் கண்ணன், ஒன்றியச் செயலாளர்கள் சொக்கலிங்கம், விஜயகுமார், நெடுஞ்செழியன், தயாளன், ராஜாராம், பழனி, ரவிச்சந்திரன், மணிமாறன், விஜயராகவன், பச்சையப்பன், நாராயணமூர்த்தி, சாந்தி, மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், செஞ்சி சேர்மன் மொக்தியார் அலி மஸ்தான், மாவட்ட அமைப்பாளர்கள் அன்சாரி, சந்திரன், செந்தில்குமார் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




சேலம் மத்திய, கிழக்கு, மேற்கு மாவட்ட மாணவரணி ஒன்றிய, நகர, பேரூர், பகுதி நிர்வாகிகளுக்கான நேர்காணல் சேலம் கலைஞர் மாளிகையில் நடைபெற்றது. இதில் சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ., கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. ஆகியோர் தலைமை வகித்தனர். மாநில மாணவரணி இணைச் செயலாளர் எஸ்.மோகன் முன்னிலை வகித்தார். மாணவரணி துணைச் செயலாளர்கள் தமிழரசன், திருச்சி ஆனந்த், பொன்ராஜ் வீரமணி ஆகியோர் கலந்து கொண்டு நேர்காணல் நடத்தினர். இந்நிகழ்ச்சியில் கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முனைவர் அ.சீனிவாசன் அப்பாதுரை, மத்திய மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கோகுல் காளிதாஸ், மேற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கண்ணன், மாநகர மாணவரணி அமைப்பாளர் மணிகண்டன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




தர்மபுரி கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தர்மபுரி, பென்னாகரம் சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட நகர, ஒன்றிய, பேரூர்க் கழக மாணவர் அணி அமைப்பாளர்கள் நேர்காணல் தர்மபுரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் என்.பி.பெரியண்ணன் ஏற்பாட்டில் தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் நடைபெற்றது. நேர்காணல் சிறப்பு பொறுப்பாளர்கள் மாணவரணி மாநில இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாநில மாணவரணி துணைச் செயலாளர் சேலம் ரா. தமிழரசன், மாவட்ட நிர்வாகிகள் வே. தங்கமணி, ரேணுகா தேவி, ஆறுமுகம், மாணவரணி துணை அமைப்பாளர்கள் கௌதம், அன்பரசு, வேடியப்பன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் நடைபெறும்

# சிறப்பு வாக்காளர் சரிபார்த்தல் மற்றும் வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணிகளின் பொறுப்பாளர்கள் நியமனம்!

## மாவட்டக் கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ.அறிவிப்பு!



1-1-2025 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் - திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, தமிழ்நாடு மாநில தலைமை தேர்தல் அதிகாரி அவர்களால் அறிவிக்கப்பட்டு, வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிறு நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

தமிழக முதல்வர், கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருவள்ளூர் மத்திய மாவட்டம், ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட 823 பாகங்களுக்கும்,

வருகிற 2024 அக்டோபர் 29 முதல் நவம்பர் 28 வரை வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் இடமாற்றம் குறித்து நடைபெறவுள்ளது. இச்சிறப்பு முகாமில் கீழ்க்கண்ட மாவட்ட நிர்வாகிகள் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

ஆவடி சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பொறுப்புக் குழு

பொறுப்புக்குழு தலைவர் : சண் பிரகாஷ்

தொகுதி பார்வையாளர் : ஆர்.டி.ஆதிசேசன்

| வ எண் | கழகநிர்வாகம் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|
| 1 | ஆவடிகிழக்குபகுதி<br>திரு.பேபிசேகர் | மாவட்ட பொருளாளர்<br>திரு.நரேஷ் |
| | | வழக்கறிஞர் அணி<br>திரு.M.கார்த்திக் |
| 2 | ஆவடிமேற்குபகுதி<br>திரு.பொன்விஜயன் | மாவட்ட துணை செயலாளர்<br>திரு.ஜெயபால் |
| | | வழக்கறிஞர்<br>திரு.B. ரமேஷ் |
| 3 | ஆவடிவடக்குபகுதி<br>திரு.நாராயணபிரசாத் | மாவட்ட தொ.அணி அமைப்பாளர்<br>திரு.நாகூர்கனி |
| | | வழக்கறிஞர் அணி<br>திரு.A.அகஸ்டின் |
| 4 | ஆவடிதெற்குபகுதி<br>திரு.ராஜேந்திரன் | மாவட்ட துணை செயலாளர்<br>திரு.V.J. சீனிவாசன் |
| | | வழக்கறிஞர் அணி<br>திரு.வே. கார்த்திக் |
| 5 | திருவேற்காடுநகரம்<br>திரு.NEK மூர்த்தி | பொதுக் குழு உறுப்பினர்<br>திரு.எத்திராஜ் |
| | | வழக்கறிஞர்<br>திரு.D. ராஜ்குமார் |
| 6 | திருநின்றவூர்நகரம்<br>திரு.தி.வை.ரவி | மாவட்ட அவைத்தலைவர்<br>திரு.மா.ராஜி<br>திரு குமார் |
| | | வழக்கறிஞர் அணி<br>திரு.L. தேவராஜ் |
| 7 | பூவிருந்தவல்லிமேற்குஒன்றியம்<br>திரு.தேசிங்கு | மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்<br>திரு.துர்காபிரசாத் |
| | | வழக்கறிஞர் அணி<br>திரு.பொன்புனிதவராஜ் |

**பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பொறுப்பு குழு**

பொறுப்புக்குழு தலைவர் : திரு ஆ கிருஷ்ணாசாமி M.L.A.

தொகுதி பார்வையாளர் : மருத்துவர் திரு அருண் ஜெயகுமார்

| வ எண் | கழகநிர்வாகம் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|
| 1 | பூவிருந்தவல்லிமேற்குஒன்றியம்<br>திரு.தேசிங்கு | மாநகர இளைஞரணி அமைப்பாளர்<br>திரு.துர்காபிரசாத் |
| | | வழக்கறிஞர் அணி<br>திரு.பொன்புனிதவராஜ் |
| 2 | பூவிருந்தவல்லிநகரம்<br>திரு.GR திருமலை | மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்<br>திரு.சுரேஷ்குமார் |
| | | வழக்கறிஞர் அணி<br>திரு.S. ராஜேந்திரன் |
| 3 | பூவிருந்தவல்லிகிழக்குஒன்றியம்<br>திரு.கமலேஷ் | திரு AJ பவுல்<br>திருமதி.காஞ்சனாசுதாகர் |
| | | வழக்கறிஞர்<br>திரு.N.P. மாரிமுத்து |
| 4 | திருவள்ளூர்கிழக்குஒன்றியம்<br>திரு.பிரேம்ஆனந்த் | திரு KJ ரமேஷ்<br>திரு.குமரேசன் |
| | | வழக்கறிஞர்<br>திரு.பா.முருகன் |
| 5 | திருவள்ளூர்மேற்குஒன்றியம்<br>திரு.ஜெயசீலன் | திரு.மா.ராஜி |
| | | வழக்கறிஞர்<br>திரு.S. செந்தில்குமார் |
| 6 | திருவள்ளூர்வடக்குஒன்றியம்<br>திரு.புஜ்ஜிராமகிருஷ்ணன் | திருமதி சங்கீதா ஸ்ரீநிவாசன்<br>திரு.மகாதேவன் |
| | | வழக்கறிஞர்<br>திரு.PKE நாகராஜ் |
| 7 | எல்லாபுரம்மத்தியஒன்றியம்<br>திரு.தங்கம்முரளி | திருமதி.காயத்ரிஸ்ரீதர் |
| | | வழக்கறிஞர்<br>திரு.K.J. அன்பு |
| 8 | திருமழிசைபேரூர்<br>திரு.தி.வே.முனுசாமி | பொது குழு உறுப்பினர்<br>திரு.விமல்வர்ஷன் |
| | | வழக்கறிஞர்<br>திரு.துரைபழனி |

மேற்கண்ட பொறுப்பாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் செயலாளர்களுடன் இணைந்து மேற்குறிப்பிட்ட நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்கதீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களில் (திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் சா.மு.நாசர் எம்.எல்.ஏ.) எனது தலைமையில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.கிருஷ்ணாசாமி எம்.எல்.ஏ., ஆவடி தொகுதி பொறுப்பாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன் மற்றும் பூவிருந்தவல்லி தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் மருத்துவர் அருண் உள்ளிட்டோர் இணைந்து திருவள்ளூர் மத்திய மாவட்டம் முழுவதும் சிறப்பு முகாம்களில் ஆய்வு மேற்கொள்வர் என்பதை தெரிவித்துத் கொள்கிறேன்.

1. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் : 29.10.2024
2. பெயர்களைச் சேர்க்க/நீக்க / திருத்தம் செய்வதற்கு மற்றும் மனு கொடுக்க கால அவகாசம் :29.10.2024 முதல் 28.11.2024 வரை
3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் : தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி. ஞாயிறு நாட்கள்
4. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் : 06.01.2025

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி, சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கழக செயலாளர் - நிர்வாகிகள் மற்றும் வாக்குச் சாவடி நிலைய முகவர்கள் (BLA-2) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ.**
செயலாளர்
திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.